732

Reg No. M. 1534.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8- FEB 1929
MADRAS

R. C. Training School Magazine, Trichinopoly.

திருச்சிறுப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

போதனு விஷயப் பூங்கொத்து.

மாதமோருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கோத்து 18.	டிசம்பர் 1928.	மலர் 6.

பத்திராதிபர் குறிப்புகள்.

...ாட்சி கமிட்டியார் சலனப்படம் கல்வி ...ம் கருவியென அறிந்து கல்வி சம்பந்த ...ன்பதற்கு பாடசாலை மாணவர்களுக் ...ண்டுமென்று மாகாண அதிகாரிகளுக் ...ருக்கின்றனர்.

***   ***

JL
M211, N11 PP
N28·8·6.
182228

சென்னை கவர்னர் இவ்வருடச் சர்வ கலாசாலை பட்டதாரிகளுக்குக் கூறிய உந்நத மொழிகள்: "படிப்பின் மதிப்பு மாணவர்கள் சேகரித்த அறிவின் அளவால் ஏற்படுவதல்ல, கற்கும் காலங் கடந்தபின் அவர்கள் மனது அடைந்துள்ள நிலைமையாலேயே கணிக்கப்படும்."

***　　　***　　　***

போதனுமுறை பாடசாலை மாணவர்க்கு சர்க்கார் பரீட்சை மார்ச்சு மீ 25-உ ஆரம்பமாகும்.

தென்னிந்தியா தாவரங்கள்.

13. பருத்தி.

பருத்தி பலபருவப்பயிர் வகையைச்சேர்ந்த குத்துச்செடி வர்க்கத்தைச்சேர்ந்தது. உஷ்ணப் பிரதேசமே இதன் அபிவிருத்திக்கேற்ற இடமாகும். கரிசல், களிமண் பிரதேசத்தில் பருத்தி செம்மையாய் வளரும். தென்னிந்தியாவில் திருநெல்வேலி, மதுரை, ராமனுதபுரம் முதலிய ஜில்லாக்களில் இது ஏராளமாய் விருத்தியாகிறது. இதிலிருந்து கிடைக்கும் பஞ்சு, வஸ்திரம் நெய்வதற்குப் பெரிதும் உதவுவதுபற்றி இதனை ஏராளமாய் உற்பத்தியாக்குவர். பருத்தி நம் நாட்டினருக்கு செல்வ ஆதாரப் பொருளில் தலையாயது.

பருத்திச் செடியின் பிரகாண்டம் உறுதியாயும் பற்பல கிளைகளைப்பெற்றுப் பரவலாய் வளரும் இயல்பினையுடையது. இலைகள் வெளிறின பச்சை நிறமுடையன. இவை தடித்தும், மூன்று, ஐந்து அல்லது ஏழு பிரிவினைகளையுடையனவாய் பிரகாண்டத்தில் ஒன்றுக்கொன்று மாறிய ஒழுங்கில் பொருந்தியிருக்கின்றன. கணுச்சந்துகளில் புஷ்பக் குருத்துக்கள் தோன்றுகின்றன. இவை புறவிதழ்களாற் சூழப்பெறுவதுடன் இருதய வடிவமுள்ள மூன்று பெரிய பசிய பூக்காம்பு இலைகளால் பாதுகாக்கப்படும்.

பிரகாசமான மஞ்சள் நிறம் பொருந்திய ஐந்து பூவிதழ்கள், கரிய செந்நிறமமைந்த அடிப்பிரதேசத்துடன் சிறந்து விளங்குகின்றன. பூவரசு, வெண்டை, செம்பருத்தி இவற்றின் புஷ்பங்களிற் காண்பனபோல், பருத்தியிலும் பூந்தாள்களனைத்தும் ஒன்றுசேர, உரைபோல், அண்டாசயத்தையும், கீலத்தையும் சூழ்ந்து அமைந்திருக்கின்றன. கீலம் நீண்டது. அதன் உச்சியாகிய கீலாக்ரம் ஐந்து பிரிவினைகளையுடையது.

182278
... 600 008

பச்சை நிறமான பருத்திக்காய்கள் முற்றமுற்ற சதைப் பற்றற்று, மூன்று அல்லது ஐந்து பிரிவுகளைக்காட்டி, உள்ளிருக்கும் வெள்ளிய பஞ்சுப்பொருளைத் தோற்றுவிக்கின்றன. அவ் வெடிப்புகள் நாளடைவில் நன்றாய்த் தெரியவரும். நார் சத்தோடுகூடிய பஞ்சுப்பொருள் விதைகளுக்குப் புச்சம்போல் சூழ்ந்திருப்பதுடன், விதைகளைப் பரவச்செய்ய அமைந்திருப்பவையெனக் காட்டுகின்றது. ஆயினும் மனிதர் இப்பஞ்சுப் பொருளையும், விதைகளையும் இயந்திரம் அல்லது பிறசாதனங்களைக்கொண்டு வெவ்வேருகப் பிரித்து பஞ்சை வஸ்திரம் நெய்வதற்கெனக் கொள்வர்.

விதைகளில் நல்ல உணவுப்பொருள் அமைந்திருப்பதால் கால்நடைகளுக்கும், விசேஷமாய் கறவை மாடுகளுக்கும் பருத்தி விதைகளைப் பெரிதும் உபயோகிப்பர். விதைகளினின்றும் இறக்கப்படும் எண்ணெயை சவர்க்காரம் தயாரிக்க உபயோகிப்பர். பிண்ணுக்கு நிலத்துக்கான சிறந்த உரமுமாகும்.

அமெரிக்கன் பருத்தி என்பது மற்ளுெரு வகை. இப்பஞ்சு மிகவும் நயமுள்ளது. மரப்பருத்தி—இலவன் பருத்தி—நூல் நூற்கத் தகுதியற்றதெனினும், மெத்தை, தலையணை முதலிய காரியங்களுக்கு மிகவும் ஏற்றதாகும்.

14. ஆமணக்கு.

இதுவும் குத்துச்செடி வர்க்கத்தைச்சேர்ந்த தாவரம். இது ஒரு பருவப்பயிர். எண்ணை வித்துக்களை உண்டாக்குவதுபற்றி இதனை ஏராளமாய்ப் பயிராக்குவர்.

இதன் இலைகள் கைவிரல்களின் வடிவொத்த விசேஷ தோற்றத்தையுடையன. ஐந்து அல்லது ஏழு பிளவுகளோடு பல்வெட்டான விளிம்புகளையுடையன. காம்பு நீண்டிருக்கிறது. காம்பு இலைப்பிரதேசத்துடன் பொருந்தியிருக்கும் விதம் உற்று நோக்கற்பாலது.

புஷ்பங்கள் கொத்துக் கொத்தாய் பிரகாண்டத்தின் நுனியில் பூக்கின்றன. ஒரே தாவரத்தில் ஆண், பெண் பூக்கள் தனித் தனியாயும், பெண் பூக்களினடியில் ஆண் பூக்களின் வரிசை அமைந்தும் காணப்படும். மாற்று மகரந்த ஸ்பரிசம் ஏற்படும் வண்ணம் அமைந்திருக்கும் இவ் வேற்பாடு கவனிக்கத்தகும். புஷ்பங்களில் பூவிதழ்கள் என்ற பாகமே இல்லை. மூன்று அல்லது ஐந்து பிரிவினைகளைக்கொண்ட புறவிதழ்கள் மாத்திரம் இருக்கின்றன. பூந்தாள்களின் அமைப்பு வெகு விந்தையானது.

ஒரு பூந்தாளேப் பார்த்தால் அநேகஞ் சேர்ந்த ஓர் கொத்தை யொத்திருக்கிறது. பெண் பூ ஒவ்வொன்றுக்கும் மூன்று பிரிவு களுள்ள கீலங்கள் உண்டு.

காய்கள் உலர்ந்த மேற்ருேல் வர்க்கத்தைச்சேர்ந்தவை. மேற்ருேலில் முட்கள்போன்ற வளர்ச்சிப்படை நிறைந்திருக் கிறது. காய் மூன்று பிரிவுகளுடையது. காய்கள் வெடிக்க விதைகள் பரவும். சில பறவைகள் ஆமணக்குக் காய்களே தாங் கள் உண்ணுதற்குரிய வண்டுகளாமென எண்ணி அவற்றைக் கொத்தி, பற்றிக்கொண்டு, தூரம் பறந்துசென்று உண்ண யத் தனிக்கும்போது, வண்டுகளல்லவெனத் தேர்ந்து, ஏமாறி, அவற்றை உதறியெறியவே, அவை ஆங்காங்கு பரவுகின்றன. இவ் வாருகவும் விதைகள் பரவுகின்றன.

விதைகளில் நிரம்பிய கொழுப்புப் பொருள் அடங்கியுள்ள தால், எண்ணெய் இறக்கப்படுகிறது. அதிலிருந்து சோப்பு, மெழுகுவர்த்தி முதலிய வியாபாரப் பொருள்கள் தயாரிக்கப்படு கின்றன. இயந்திரங்களுக்கு கொழுப்புக்காகவும், விளக்கு எரிக் கவும் இவ்வெண்ணெய் பெரிதும் உதவும். பிண்ணுக்கு ஓர் சிறந்த தாவர எருவாகின்றது.

[தொடரும்.]

T. S. Ganapathi Aiyer,
1st Assistant,
R. C. Boarding & Training School, Trichinopoly.

சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்வி களுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடி தங்கள், வியாசங்கள் முதலியவைகளேப் பிரசுரிப்போம். எழுது பவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தின் இடது பக் கம் கொஞ்சம் இடம்விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளி வாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதி யல்லர்.]

ஆரம்பக் கல்வி.

ஆரம்பக் கல்வி போதிக்கும் தற்கால முறையை அடியோடு மாற்றிப் பண்டைய முறையில் போதிக்கவேண்டுமென்றும், அதிலும் நம் மக்களுக்கு சட்டமூலமாகக் கட்டாய இலவசக் கல்வி போதிக்கும்படி கூக்குரல் இடவேண்டுமென்றும் திருவண்ணமலை தாலூகா அக்கினிகுல க்ஷத்திரிய வாலிபர் சங்கக் காரியதரிசி இராஜஸ்ரீ பொ. குப்புசாமிக் கண்டர் அவர்கள், செஞ்சி தாலூகா புலிப்பட்டு கிராமத்தின் போர்டு பாடசாலைத் திறப்பு விழாவில், ஜில்லா போர்டு மெம்பர் ராஜபெரியண்ண கண்டர் அவர்கள் தலைமையில் கூறினதாகத் தெரிகிறது.

இக்கால முறையைச் சரியாகக் கவனமாய், ஊக்கமாய், உண்மை உழைப்பால் கையாடின் சரியான—நல்லபடிப்பு ஏற்படாதென்பதில்லை. ஒருநாள் வந்த பிள்ளைகள் மறுநாள் வந்தாலன்றோ புதுமுறை ஏற்ற பலனளிக்கும்! ஒருநாள் வந்த பிள்ளை ஒருநாள் வருவதில்லையே. வீடு பார்த்துக்கொள்ளவும், நெல் பார்த்துக்கொள்ளவும், பிள்ளை வைத்துக்கொள்ளவும், விவசாயம் வேலை செய்யும் பெற்றோர் உற்றோர் முதலியவர்களுக்குச் சாதம் கொண்டுபோகவும், ஆடு மாடு ஓட்டிக்கொண்டு போகவும், பார்த்துக்கொள்ளவும், ஊர்களுக்குப் போய்வரவும் இருக்கின்றன. கட்டிக்கொள்ள வேஷ்டியில்லையென்றும், இவ்விதமாக நிற்கும் காலங்களில் ஏனைய பிள்ளைகளின் துர்ச்சகவாசத்தால், விளையாட்டுகளுக்காகவும் இடையிடையே நின்றுவிடுவதாலும், புதுமுறை எந்தவிதம் அந்தமாகப் பிரகாசிக்கும்? இவைகளையெல்லாங் கவனியாமல், புதுமுறை புதுமுறை என்று போராடும் பரீட்சாதிகாரிகளுக்குப் பயந்து, புதுமுறையோடு போராடிப் போதிப்பதில் கல்விவிருத்தி நல்விருத்தியாவதெங்ஙனம்? குறைவான விருத்தியே, போதிய விருத்தியின்மையே ஏற்படக்கூடும். இதைக் காணும் (காரணத்தை அறிய இயலாததோடு நேரமுமில்லாத) பெற்றோர் தம் பிள்ளைகட்குப் படிப்பு வரவில்லையென்றும், பரீட்சாதிகாரி உபாத்தியாயர் சரியாய் உழைக்கவில்லையென்றும் மத்தளத்தைப்போல் உபாத்தியாயரை இம்சிப்பார்களானல், குறைகூறுவார்களானல் உபாத்தியாயர்கள் என்ன செய்யக்கூடும்? உபாத்தியாயர்களின் நிலைமை என்ன என்பதை உணருங்கள். பெற்றோரின் விருப்பப்படி பழைய முறையை ஆசிரியர்கள் அநுசரிப்பார்களானல், பரீட்சாதிகாரிகளின் குறைகூறுதல் ரிப்போர்ட்டுகளுக்கும் தாலூகா போர்டு முதலிய ஸ்தல ஸ்தாபனத்தார்களின் கண்டிப்புகளுக்கும் பயப்பட (வயிற்றுப்பிழைப்

புக்காக அமர்ந்து இந்தத் தொழிலின் நிமித்தம்) வருந்தவேண்டி நேருகிறது. மேலும் புதுமுறையின் சரியான அமைப்பின்மையாலோ, போதிப்பின் பலம் சரியாயிராததாலோ, மேல் வகுப்புகளுக்குச் சென்றிருக்கும் பையன்களுக்கும் தமிழ் எழுத்துகளின் தாரதம்மியங்களே (வித்தியாசங்களே) உணர்ச்சியேயில்லாதிருக்கின்றது.

தமிழ் எழுத்து கற்பிக்கும் பழைய முறை மனதில் பசுமரத்தாணிபோல் பதியக்கூடியதுதான். நாட்சென்று பொருள் விளங்கவும், படிப்பு ஏற்படக்கூடியதுமானதாயிருக்கின்றதுதான். உலகநீதி, ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் ஆகிய தெளிவான, சில நாள், காலம், வருஷங்கள் சென்றதும் தானே தெரிந்துகொள்ளக்கூடிய நீதிவாக்கியங்களைப் பதம் பிரித்து உரையோடு (அர்த்தத்தோடு) கற்பிக்கவேண்டும். வருஷ முழுவதும் 20-30 வரி தெரிந்தாலும் போதுமென்ற புதுமுறைக்காரர்களும் இருக்கின்றனர். புதுமுறைக்காரர்களில் அநுபவசாலிகள் இதனை ஒருபோதும் ஒத்துக்கொள்ளார்கள்தான். வருஷ முழுவதற்கும் ஆகார தானியங்கள் சேகரித்து வைத்துக்கொண்டு கிடைக்காத காலங்களில் சிரமப்படாமல் காலந்தள்ளுபவர்களைப்போல், மேற்கூறிய எளிய நீதி வாக்கியங்களை ஏராளமாய்ச் சிறு வயதில், பாடம் பண்ணக்கூடிய பள்ளிக்கூடப் பருவத்தில் படித்து மனப்பாடம் செய்துகொண்டால், இவர்கள் பெரியவர்களான பின்னர், தானே இலகுவில் தெரிந்துகொள்ளக்கூடும் என்பதை அநுபவசாலிகள் ஒருக்காலும் மறுக்கமாட்டார்கள். இது இக்காலத்துப் புதுமுறைக்காரரது புத்தியில் நுழைவதேயில்லை. இவை பரீட்சாதிகாரிகளாயிருந்தவர்கள், இருப்பவர்களுடைய அபிப்பிராயங்களாகும். என்ன செய்வது? ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம். உபாத்தியாயர்களோ, இரண்டிற்கும் இடையிலிருந்துகொண்டு நெருக்குற்று இம்சைப்பட்டு, கலக்கமில்லாத சாந்தமான இருதயத்தோடு காரியத்தை தொழிலைக் கவலையில்லாமல் செய்வதற்கில்லாதும் போகின்றது. காரணர் எவர்? பெற்றோரும் பரீட்சாதிகாரிகள், நிர்வாகிகளும் ஆகியவர்கள்தான். இவர்கள் ஒன்றுகூடி இவ்விஷயங்களை முடிவுசெய்து ஒவ்வொருவர் மனத்திலும் ஊடுருவச்செய்யாமல் செய்வதால் பல அபிப்பிராயங்கள்தான் ஏற்படும். கருதிய பயன் காணக் கஷ்டமாகத்தானிருக்கும். கடைசியில் "ஊருக்கிழைத்தவன் பிள்ளையார் கோவிலாண்டி" என்பதுபோல், இவர்களுக்குழைத்த பள்ளிக்கூட உபாத்தியாயர்மேல் குறைகூற வேண்டியதும்

(குற்றம் சொல்வதும்) சுமத்துவதும் பரம்பரை வழக்கமாய்ப் போய்விட்டது.

நாள்தவருமல் பள்ளிக்கூடம் வராமல் மேலே கண்ட காரணங்களினுல் நாள் தவறித் தவறி, விட்டு விட்டுப் பாடசாலைக்கு வரும் கிராமாந்தரப் பாடசாலைகளின் பிள்ளைகளுக்குப் புதுமுறை போதிப்பது, எல்லாப் பிள்ளைகளேயும் ஒருங்கே வைத்துக் கொண்டு போதிப்பது, ஒவ்வொரு பதத்தின் தாத்பரியங்களை, விளக்கிப் போதிப்பது இயலாததே. என்ருலும், விட்டு விட்டு வருங் காரணத்தால் தனித்தனியாய்ப் பாடங்கேட்டு கற்பிக்கலாம். இம்முறையில் சாவகாசமாய் ஒவ்வொரு பிள்ளைக்கும் தனித்தனியாய் அவ்வவர்களது பாடத்தில் உள்ள வார்த்தையின் பொருள்களை விளக்கிக் கற்பித்தல் அசாத்தியமே. கால அட்டவணையில் குறிப்பிட்ட 25 அல்லது 30 நிமிஷம் போதவே போதாது. எல்லாப் பிள்ளைகளேயும் அவரவர்கள் ஒப்புவிக்க, சொல்ல வேண்டிய பாடத்தைப் பார்த்து எழுதி அப்பியாசிக்கச் சொல்லி விட்டு, ஒவ்வொரு பையனுய் முதலில் எழுதிமுடித்து விட்டிருக்கும் பையன்களாய்க் கூப்பிட்டுக் கூப்பிட்டு பாடங் கேட்டுக் கேட்டு புதுப் பாடம் சொல்லிக்கொடுத்து, புதுப் பாடத்தினை எழுதச்செய்து அப்பியாசிக்கச் செய்துகொண்டு வரலாம். இவ்வகையில் 3 பாடம் நடைபெறுகிறது. என்ருலும் இச்சமயங்களில் இம்முறையில் பரீட்சாதிகாரிகள் வந்து பார்த்துவிடின் காலதேச வர்த்தமானத்தையறிந்து வேலைநடக்கிறது, நடந்து கொண்டிருக்கிறது என்று திருப்திகொள்ளாமல் அட்டவணைப்படி பாடம் நடக்கவில்லை, உபாத்தியாயர் ஏதோ தம் இஷ்டம்போல் பொழுதுபோக்கிக்கொண்டிருந்தார் என்று எழுதிவிடுவர். இப்படி எல்லா பரீட்சாதிகாரிகளுமேயிருக்கிருர்கள் என்பதில்லை. இப்படியும் சிலர் இருக்கின்றனரென்றே குறிப்பிடுகின்ருேம்.

இங்கு குறிப்பிட்ட வழியில், முதல் வகுப்பினராகிய பாலர்களுக்கு இடைவிடாமல் பாடம் போதிக்க 2 அல்லது 3 பீரியட் செல்லும். இந்த இரண்டு மூன்று பீரியடும் மற்ற வகுப்புகளைக் கவனிப்பதும் ஒரே வேலை கொடுத்துவிடுவதும் புதுமுறைக்கு முற்றும் விரோதமாகும். ஆகவே, இப்பிள்ளைகள் ஒரே வருஷத்தில் தங்களுக்கேற்றவற்றைக் கற்று அடுத்த (2-வது) வருஷத்தில் 2-வது வகுப்புக்கு வந்துவிடவேண்டுமானுல், பாடசாலைப் படிப்பு பள்ளிப் பிள்ளைகளின் மனே அறிவு அஸ்திவாரம் பலமுள்ளதாய் அமைய ஏற்படவேண்டுமானுல், இந்த முதல் வகுப்புக்குமட்டும் 20 பிள்ளைகளாயிருந்தாலும் தனி உபாத்தியாய

ராய் இருந்தாலே, இருக்கும்படி செய்தாலே, புதிய முறையிலும் போதிய விருத்தியும் காணலாம் எனலாம்.

ஒரு வகையில் கட்டாயக் கல்விமுறை ஏற்பட்டாலே, பிள்ளைகள் ஒழுங்காய், தவறுமல் பாடசாலைக்கு அனுப்பப் பெற்றோர்களுக்கு அக்கரை ஏற்படுமெனலாம். இப்போது இந்த அக்கரை மிகக்குறைவே. பிள்ளைகளாய் இஷ்டப்பட்டுப் பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டும்; இல்லையேல், உபாத்தியாயர் இதர பிள்ளைகளை அனுப்பி, வராத பிள்ளைகளை அழைத்துவரச் செய்ய வேண்டும். அதற்கும் வராத பிள்ளைகளை உபாத்தியாயரே நேரில் சென்று கொண்டுவரவேண்டும். பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காய் வராமலிருப்பதற்கும், உபாததியாயர் வீடுகட்குச்சென்று அழைத்து வருவதற்கும் உபாத்தியாயர்களே காரணம். இவர்கள் பிள்ளைகள்தானே, பள்ளிக்கூடத்திற்குப் பிரியங்கொண்டு ஓடி வரும்படி செய்ய ஏற்பட்டிருக்கும் கிண்டர் கார்ட்டன் முறைகளைக் கையாளுவதில்லையென சில புதுமுறைக்காரர்கள் இயம்பலாம். இப்படிச் சொல்லுகிறவர்கள் வந்து இருந்து புது முறைப்படியும் கால அட்டவணை பிசகாதபடியும் நடத்தினால் அந்த அருமை அப்போது தெரியும். 'சொல்லுவது எளிது, செய்வது அரிது' என்பது அறிந்திருந்தும் இவர்கள் இப்படியெல்லாம் சொல்வது, சொல்லுகிற விஷயத்தில் நேரநுபவமில்லாமல் தாம் படித்ததைக்கொண்டுமட்டும் சொல்வதென்றே சொல்வோம். இவர்கள், தம் வீட்டுத் தம் குழந்தைகளை இரண்டொருவரைப் பாடசாலைக்கு அனுப்ப எவ்வளவு முயற்சி, சமாதானம், தந்திரம் முதலியன கையாளவேண்டியிருக்கிறதென்பதை நினைத்துப்பார்த்தால் பல குழந்தைகளை வைத்துக்கொண்டு பராமரிப்பது, ஒருவர்க்கொருவர் செய்துகொள்ளும் விஷமங்களை, சச்சரவுகளை, விளையாட்டுக் குற்றங்களை சீர்திருத்தம்செய்து, அடக்கிக்கொண்டுவருவதே எவ்வளவு சிரமமென்பதையும், இதற்குமேல் அவர்களுக்கு ஒழுக்கம், ஒருவர்க்கொருவர் ஒற்றுமை, அடக்கம், பள்ளிக்கூடத்திற்கு வரப் பிரியமுண்டாக்குதல், அறிவுவளர்ச்சிக்கான பேச்சுகள், படிப்புகள் ஆகியவைகளைக் கதைகள், வேடிக்கை விளையாட்டுகள் மூலமாய் உபாத்தியாயர் செய்ய வேண்டியிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

கட்டாயக்கல்வி ஏற்பட்டால் சில ஏழைப் பெற்றோர்க்குச் சிரமமே ஏற்படும். தங்கள் வயிற்றுப் பிழைப்பில், தங்கள் ஆடுமாடுகளைப் பார்த்துக்கொள்ளவோ, குழந்தைகளை வைத்துக் கொள்ளவோ, பார்த்துக்கொள்ளவோ இன்னும் மேலே ஆரம்பத்தில் சொல்லியவற்றையோ கவனித்துக்கொள்ள, உதவி செய்ய

ஏதுவில்லாமற் போகக்கூடும். இவ்வளவு நிர்ப்பந்த தசையில், நிர்ப்பாக்கிய நிலைமையில் உள்ளவர்களின் குழந்தைகளுக்குப் புத்தகம் சிலேட்டுகளும் ஒருவேளை பகல் ஆகாரமேனும் உதவினால் அவர்களுக்கும் ஒரு ஆதரவாக இருக்கும். மனச்சமாதானம், சாந்தி ஏற்படும், தங்களுடைய கஷ்டத்தில் சிரமமும் தோன்றாமல் ஒரு சிறிது பொறுப்பு சர்க்கார் பாடசாலை வழியில் ஏற்றுக்கொண்டுவிட்டார்களென்ற மன நிம்மதி ஏற்பட்டுவிடும். நிர்ப்பாக்கிய நிலைமையிலுள்ளவர்களைக் கல்வி சம்பந்தமாய்ச் சர்க்கார் கவனிக்கும் கடமையும் கவனித்ததாக ஏற்படும். இதனையும் நம் பிரதிநிதிகளும், பொதுஜன நன்மைக்கென்றே பாடுபடுவதாகச் சொல்வோர்களும் சங்கங்களும் கவனித்துத் தக்கதுசெய்து சீரும் சிறப்பும் எய்தி சிறந்துறுவார்களாக.

P. பரிமணப்பல்லவராயர்.

புஷ்பங்களும் அதன் பாகங்களும்.

(தொடர்ச்சி.)

பூக்கள் கூட்டமாக ஒரு தண்டிலிருந்தால் அதற்கு 'மஞ்சரி' அல்லது, 'புஷ்பக்கொத்து' எனப் பெயர். நெரிஞ்சி, மயில் கொன்னை இவற்றிற்குக் காம்புகளுண்டு. பூக்காம்பிற்கு விருந்தம் என்றும், பூமஞ்சரியின் காம்பிற்கு மஞ்சரி விருந்தம் என்றும் சொல்லலாம். நெரிஞ்சிப்பூவில் இதன் பாகங்கள் விருந்தாக்ரத்தில் அல்லது விருந்தத்தின் நுனியில், ஒன்றன்கீழ் ஒன்றாக ஒழுங்காகச் சேர்ந்திருக்கிறது. அண்டகோசம் விருந்தாக்ரத்தின்மேல் இருப்பதாலும் மற்ற பாகங்கள் இதற்குக் கீழாக அமைந்திருப்பதாலும் அண்டகோசத்தை "உச்சம்" என்றும் மற்ற பாகங்களை "நீசம்" என்றும் மொழிதல்வேண்டும். கடுகு, முள்ளங்கி இப்பூக்களுக்கு விருந்தம் இல்லை. விருந்தபுச்சம், மயில்கொன்னைப் பூவில் இருப்பதுபோல பூவுக்கொன்றாகவாவது, பருத்தியிலிருப்பதுபோல மூன்றாகவாவது இன்னும் அதிகமாகவாவது இருக்கும்.

வெண்டை, மணித்துத்தி, சித்தாமுட்டி, இப்பூக்களின் விருந்தபுச்சங்கள் புஷ்ப கோசத்திற்கடியில் வட்டமாகச் சுற்றிக்கொண்டு இருக்கும். கணக்கிட, இவை 8 முதல் 10 வரை இருக்கும். சில செடியில் விருந்தபுச்சம் பெரியதாக இருக்கும். வாழைக்கதிரில் பூக்களின் வரிசைகளை மூடிக்கொண்டு இருக்கும் தடித்த, சிவந்த, மடல்போன்ற பாகங்கள் விருந்தபுச்சங்களே. கரணை, சேம்பு, தென்னம்பூக்கதிர் இவற்றின் புஷ்பமஞ்சரி முழுவதையும் ஒரு பெரிய விருந்தபுச்சம் கவர்ந்திருக்கும்.

JL 18.6 182278

தளவட்டம் : மலர்களில் பலவித வர்ணங்களைப் பெற்று மிகப் பொலிவுடன் விளங்கும் பாகம் இதுவே. தளங்கள் தனியாகவும், சேர்ந்தும் இருக்கும். நெரிஞ்சிப்பூவில் தளவட்டம் சமம். இதில் ஒழுங்குள்ள தளவட்டம் என்றும், பேதப்பட்டு இருப்பின் ஒழுங் கற்ற தளவட்டம் எனவும் இருவிதம். (உ-ம்.) தும்பை ஒழுங்கற்றது.

கேசரங்கள் : இதன் பாகங்கள் மகரந்தப்பையும் அதைத் தாங்கும் தாளும் இக்கேசரங்கள் தளத்தைவிட அதிகப்பட்டும், குறைந்தும், சமமாகவும் பல தினுசுகள் இருக்கும். நெரிஞ்சியில் தளத்தைவிடக் கேசரம் 2 பங்கு. தாமரை, குருக்கத்திப்பூ ஆகிய வற்றில் கேசரம் அதிகம். தும்பையில் குறைவாயும், காக்கரட் டானில் தளத்திற்குச் சமமாயும், மயில்கொன்னையில் ஒரே நீள மாகவும், முள்ளங்கி, கடுகு, இதில் 4 நீண்டும் 2 குறுகியும், தங்க அலரி, தும்பை இவற்றில் 2 குட்டை, 2 நீண்டும் இருக்கும். தத்தி, காவாடை இவற்றில் கேசரத்தண்டு குழாய்போல் இருக்கும். சில வற்றில் கேசரங்களின் தாட்கள் மகரந்தப்பைக்குமேல் நீண்டு இருக்கும். (உ-ம்.) தாமரை, ஓரிலைத்தாமரை, ஆனைக் குன்றி மணி. சூரியகாந்திப்பூவில் தாள்கள் சேராமல் மகரந்தப்பைகள் மட்டும் சேர்ந்திருக்கும்.

அண்டகோசம் : இது பூக்களின் மத்தியிலுள்ளது. இதன் பாகம் கீலம், கீலாக்ரம், அண்டாசயம் கீலாக்ரம், பெரும்பாலும் கீலத்தின் நுனியிலுள்ளது இயல்பாயினும், கீலமின்றி அண்டா சயத்தின் மேலாகவும் இருப்பதுண்டு. (உ-ம்.) நெரிஞ்சி, குருக் கத்தி இவற்றின் கீலாக்ரங்கள். கீலம் அண்டாசயத்தின்மேல் ஒரு கம்பிபோன்று தென்படும். ஒரு அறைகொண்ட அண்டகோசம்: கிலுகிலுப்பை, காவாடை. இதன் அண்டாசயத்தில் ஒரு பக்கத் தின் விளிம்பில் அண்டம் வரிசையாக இருக்கும். அதிக அறைகள் உள்ளனவற்றை கலப்பு அண்டகோசம் என்றும், இதிலேயே ஒன்றில் அண்டகோசம் சேர்ந்தும் மற்றொன்றில் சேராமலும் இருப்பதால், சேர்ந்திருப்பதற்கு "இணைப்பு அண்டகோசம்," எனவும் பிரிந்து சேராமல் இருப்பதற்கு "வீற்று அண்டகோசம்" என்றும் பெயர். இணைப்பு அண்டகோசம்: (உ-ம்.) வெண்டை, பூவரசு; நெரிஞ்சி. வீற்று அண்டகோசம்: (உ-ம்.) கள்ளி, அசோகு. இணைப்பு அண்டகோசம் பல அறைகள் உடையதாயி னும் சிலவற்றில் ஒரே அறை இருப்பது இயல்பு. (உ-ம்.) ஓரிலைத் தாமரை, குருக்கத்தி அல்லது பிரம்மதண்டு, பூசணி.

M. K. Subramanyan,
Higher Senior,
R. C. B. & Training School, Trichinopoly.

கல்வி.

மனிதர்களாலே தேடற்பாலனவாகிய பொருள்கள் கல்விப் பொருள், செல்வப்பொருள் என இரண்டாம். இவற்றுள் கல்விப் பொருளே எக்குலத்தோர்க்கும் ஓர் சிறந்த கைகண்ட பொருள். ஆதலால் இக்கல்வியை மேற்குலத்தோராயினும், கீழ்குலத்தோ ராயினும் கட்டாயம் கற்றிருக்கத்தகும்.

கல்வி, கற்றற்குரிய நூல்களைக் கற்றுணர்தல்; அதாவது, நன்மார்க்கத்தைப் போதிக்கும்படியான நூல்களும், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய இவ்வுறுதிப் பொருள்களை அறிவிக் கும் நூல்களும், அந்நூல்களைக்கற்க சாதகமாயுள்ள இலக்கணம், கணக்கு ஆகிய இவைகளே கற்றற்குரிய நூல்களாம்.

நாம் கல்வி பயிலுங்கால், நம் சிந்தை முழுவதும் நம் நோக்கமாகிய கல்விகற்றுத்தேர்ச்சியடையவேண்டும் என்பதையே நாடியிருத்தல்வேண்டும். மேலும் கல்வி நம்முயிர் வாழ்க்கைக்கு ஓர் இன்றியமையாத பொருள் எனக் கொளல்வேண்டும். ஓர் ஆயுதபாணிக்குத் தன்னுடைய ஆபத்தில் உதவ ஆயுதங்கள் இருக்குமாப்போல், கல்வி கற்றோர்க்கோர் ஒப்பரிய ஆயுதமாக இருக்கிறது. நாம் உயர்குலமும், அழகும், செல்வமும் பெற்றிருப் பினும் கற்காவிட்டால் யாதொரு பிரயோசனமுமில்லை. அத்தகை யோரை முருக்கம்பூவிற்குச் சமமாகச் சொல்லலாம். மேலும் கற்றோரை அரசரிலும் மேம்பட்டவர் என்னலாம். அதற்கொப்ப,

மன்னனும் மாசுஅறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்கு
சென்ற இடம் எல்லாம் சிறப்பு

என ஔவையார் அருளிச்செய்திருக்கிறார். ஆதலினால் கல்வி யைச் சிறிதும் அவமதியாது வருந்திக் கற்கவேண்டும்.

செல்வப்பொருள் கள்வர், வலியவர் இவர்களால் கொள் ளப்படும். கல்வியோ அத்தகையோரால் கொள்ளப்படமாட் டாது. செல்வப்பொருள் வெள்ளம், அக்கினி இவைகளால் அழி யும். கல்வியோ அழியாது. செல்வத்தைப் பிறர்க்கூட்டுந்தோறும் குறைந்துகொண்டேவரும், கல்வியோ பெருகிக்கொண்டே வரும். கல்வி கற்பதால் நாம் இடையறாத இன்பத்தையடை வோம். ஆதலினால் செல்வப்பொருளினும் கல்விப்பொருளே சிறந்தது. இதற்கேற்ப,

வெள்ளத்தால் போகாது, வெந்தணலால் வேகாது, வேந்த
[ராலும்
கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலும் நிறைவொழிய
[குறைபடாது,
கள்ளர்க்கோ மிக அரிது, காவலோ மிக எளிது, கல்வி
[யென்னும்
உள்ளத்தே பொருளிருக்க உலகெலாம் பொருள்தேடி
[உழல்வதேனோ

என பெரியோர் கூறியிருக்கின்றனர்.

கல்வியை இளமையிலேயே கற்பது தகுதி. ஏனெனில், அழுக்குப்படியாத துகிலில் சாயம் நன்ருகப் பிடிக்கும். அழுக்குப்படிந்த துகிலில் நன்ருய்ப் படியாது. அத்தகையேபோல் சிறுபிராயத்திலேயே கல்வி கற்ருல் புத்தியில் நன்ருய்ப் படியும். வருத்தத்தை அடைந்துகொண்டிருக்கும் காலமாகிய முதுமையில் படிப்பது பிரயோஜனமற்றதாகும். ஆதலினுலன்ரே ஔவை பிராட்டியார், "இளமையிற் கல்" என்ற முதுமொழியை இயற்றியருளினுர்.

நாம் கல்வியை அபிவிர்த்திசெய்யவேண்டுமானுல், ஓர் நல்லாசிரியரைத் தேர்ந்தெடுத்தல் தகுதி. அப்படி தேர்ந்தெடுத்த பிறகு, அவர் சொற்கேட்டு சிரத்தையோடு அவரை வழிபட்டே நடக்கவேண்டும். அவ்வாசிரியரிடத்தில் கற்கும்போது, 'கற்க கசடு அற' என்பதற்கொப்ப நம்முடைய சந்தேகங்களையெல்லாம் நிவர்த்தித்துக் கற்கவேண்டும். கற்றபிறகும், 'நிற்க வதற்குத்தக' என்றபடி நாம் கற்ற நூலில் சொல்லியுள்ள ஒழுக்கங்களை அநுசரித்து நடக்கவேண்டும்.

மேலும், கல்வியில் தேர்ச்சியடைய வேண்டுமாயின் இடையருமல் ஊக்கத்தோடு கற்றல் தகும். இடைவிடாமல் படிக்க வேண்டும் என்பதால், அதற்கெனக் குறிப்பிட்ட காலத்தில் தன் சக்திக்கேற்றவாறு கல்வி கற்கவேண்டுமேயொழிய மற்றப்படியல்ல. அப்படிக் கற்பதால் நம்முடைய அறிவு விர்த்தியடையும். இதற்கேற்ப,

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"

என்று திருவள்ளுவர் சொல்லியுள்ளார். அதனுல் நாம் படித்ததே போதும் என்று சும்மா இருத்தல் கூடாது. நாம் படித்ததை

நம் மாணுக்கர்களுக்குக் கற்பித்து அவர்களேயும் அவ்வழியில் நடக்கச் செய்யவேண்டும். நாம் ஒரு விளக்கை ஏற்றுவித்து, அதிலிருந்து தொடர்ச்சியாக எப்படி பல விளக்குகளே ஏற்றுவிக்க ஏதுவாகுமோ, அப்படியே ஒருவருக்குக் கல்வி கற்பித்தால், அவரிடத்திலிருந்தும் படிப்படியாக பலர் கற்க நேரிடும். ஆதலால் கல்வியினும் சிறந்த தானம் ஒன்றும் இல்லே.

"கண்ணுடையரென்பர் கற்ருேர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"

என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறபடி, நாம் கல்வியென்னும் கண்ணேப் பெறவேண்டுமாளுல் கல்வியை இடைவிடாமல் கற்கவேண்டும். மேலும்,

"யாதானு நாடாமா லூராமா லென்ஞெருவன்
சாந்துணேயுங் கல்லாத வாறு"

என்ற குறளில், கற்றவர்க்கு தன்னுடைய தேசம், ஊர் அல்லாமல் வேறு எந்த நாடும், ஊரும் தன்னுடையதாகும் என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிருர். ஆக, இவ்விதமாக சிறப்பித்துக் கூறியிருக்கும் இக்கல்வியை நாம் கற்காமல், வீணுக நம்முடைய வாழ்நாட்களேக் கழிப்பது மதியீனமன்ருே?

ஆகையால் போதனுமுறைப் பாடசாலேயில் பயிலும் ஆசிரிய மாணவரே! நம் காலமாகிய இவ்விருவருடங்களில், நாம் கற்கவேண்டிய கல்வியைக்கற்று தேர்ச்சியடைய பிரயத்தனம் செய்யவேண்டும். அந்தோ! சிலர் பரீக்ஷைக்குப் படிக்கலாம் என்று தங்கள் நாட்களே விளேயாட்டாக வீணில் போக்கிவிடுகிருர்கள். ஆனல் இப்படி வீணுக்கும் ஒரு நிமிஷமேனும் மறுபடியும் பெற முடியாது. கடைசியாக பரீக்ஷைக்குரிய நாள்வரும், அப்போது மிகவும் கஷ்டப்படவேண்டியிருக்கும். ஆதலால், நாளேக்கு, நாளேக்கு என்று காலம்போக்காமல் அன்றன்று பாடத்தை அன்றன்றே படிக்கவேண்டும்.

சிலர் பரீக்ஷைக்கு ஒரு வாரம் இருக்கும்போது எந்நேரத்திலும் புஸ்தகமும் கையுமாக இருக்கிருர்கள். இப்பேர்க்கொத்தவர்கள்தான் கடைசிநாளில் மோசம்போகிருர்கள். வெள்ளம் வருவதற்குமுன் அணேகோலுவது எவ்வளவு நல்லதோ, அப்படியே ஒவ்வொருநாள் பாடத்தையும் தயார்செய்து வைத்திருப்போமாளுல், பரீக்ஷை சமீபிக்கும்போது கஷ்டப்படவேண்டியதில்லேயன்ருே? இதற்காகவே,

" வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும் "

என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆதலால் கல்வியை அலட்சியம் செய்யாமல் யாவரும் கட்டாயம் கற்றே தீரவேண்டும்.

M. CHINNASWAMY,
Higher Senior,
R. C. Boarding & Training School,
Trichinopoly.

அன்னைதன் அன்பு.

அகவல்.

அன்னாய் உன்றன்—அன்பினை யுன்னில்
என்னென் றுரைப்பேன்—என்னென் றுரைப்பேன்!
எதன் எனும்பொழிற்—கிசைந்த போர்டிங்
கேதமில் அகட்டில்—எழுமூன்று திங்கள்
இன்புறச் சுமந்தனை—எம்மைப் பயின்றனை
அன்புற வளர்த்தனை—அகமிக மகிழ்ந்தனை
நீர்நிறை தொட்டியில்—நித்தமுங் காலையில்
ஓர்முறை யாட்டி—உடலழுக் கொழித்தனை
துள்ளலை யறுத்து—தூய்மறை யுரைத்து
உள்ளத் தழுக்கை—உவப்புடன் வழித்தனை
நல்நடத்தை முதல்—நடந்ததை யுரைக்கில்
புல்தடத் தோர்வெகு—புத்தியாய்க் கொள்வரென்
றொழுக்க மெனும்நல்—லுடையணி வித்தனை
இழுக்கறு ஊக்கம்—எனும்அணி யிட்டனை
சற்குணம் விடுத்தனை—சாந்தம் படித்தனை
துற்குணம் ஒடுக்கினை—துட்டரை யடக்கினை
கணக்குடன் பள்ளியில்—கலையெலாங் காட்டுவை
குணக்கறு ஸ்டடியில்—குழைத்தும் ஊட்டுவை
* மன்றம் வியப்ப—மதுரத் தமிழ்கொடு
நின்றங் கியம்ப—நெஞ்சட லெழுப்பினை

---

* எழுதுந் திறலையும் கூட்டுக.

செப்பிய பொருள்தனை—சித்திரம் விளக்குமால்
தப்பில நடத்தையாற்—றரணி தெளியவே
தேன்புவி ஞானச்—செல்வம் நடத்தையாற்
முன்புவி யோர்க்குத்—தருதியென் றளித்தனே
மன்னு வெனும்படி—மணியடித் தொருபகல்
அன்னுய் முப்பொழு—தறுசுவை யளித்தனே
நோய்க்கிடங் கொடாம—னுேக்குவை யுற்றிடில்
சீக்கறை கொடுபோய்—சிகிச்சைகள் புரிவை
காவிரி பொன்மலே—களிக்கும் கிழவிக்
கோவிலெங் குலவ—கூட்டிச் செல்லுவை
பொன்போற் கட்டளே—போற்ரு தொழினுே
இம்போ சிஷனும்—எழுதிட விதிப்பாய்
முழுவதும் பூசையில்—முட்டிட் டிறைஞ்சா
திழிமுகத் தோரை—எள்ளுவை கிள்ளுவை
கங்குல் பகல்கண்—காணி யமைத்து
பங்கம் வராமல்—பாதுகாத் திடுவை
அசன சாலேயில்—அடக்கமும் ஒடுக்கமும்
சுசியு முளோரை—தூக்கிக் கொஞ்சுவை
மந்தி யெனும்படி—குந்தி யிராமல்
பந்தாடு வோரைப்—பார்த்துநீ மகிழ்வாய்
† மீளிர் ஸ்டடிப் பொழுதை—வீண்செயா தாய்ந்து
ஒளிர்பரிக் கையிற்—றேர்வோரைப் புகழ்வாய்
ஆண்டாண்டு தோறு—மயரா தனேகம்
பூண்ட சேய்களே—புகழுடன் பெறுவை
பெற்றவள் தன்மனம்—பிள்ளேமேல் பித்தம்
முற்றிய சேய்மனம்—உரம்பெறு கல்லென
இன்பாற் காண்பபோல்—ஏடவிழ் மலர்வர
நின்பாற் திருப்ப—நினேக்கும் முதியசேய்
ஐந்திதழ் பக்கம்—அறுபத் தாறுகாண்
சந்தா தோகையை தருவதற் கியலா

† அன்றன்று கேட்ட பாடங்களே அன்றன்றே நன்ருராய்ந்தெனக் கொள்க.

[library stamp]

தெழுத் தறிவிக்கும்—ஏழைகள் நாப்பண்
விழைத்தரு வண்ணம்—விரிவதேவ் விதமென
காரிய காரணம்—கருதா தொருசேய்
சீரிய மலரை—சிறியதென் றிகழும்
தியங்கும் ஒருசேய்—திருடும் ஒருசேய்
மயங்கும் ஒருசேய்—மறையும் ஒருசேய்
வம்பிடும் ஒருசேய்—வழக்கிடும் ஒருசேய்
கும்பிடும் ஒருசேய்—கோள்சொலும் ஒருசேய்
இத்தனையும் பொறுத்—தேற்றார் மைம்மழகில்
அத்தகை செய்நலன்—அறையவும் படுமோ—அன்னாய்.

S. Aruldass,
Viriyur.

கடந்தமாத விடுகதையின் விடை "ஞானப்பிரகாசம்" என்னும் பெயரே.

புஷ்பம் ஸ்தனிஸ்லாஸ்,
அர்ச். ஆஞ்சேலா போதனா பாடசாலை.

தமிழ்நாடு ஆவணக் காப்பக
182278
-600 008

PERMISSU SUPERIORUM.
St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1928.